## முதன்மை மாவட்ட நீதிமன்றம், செங்கல்பட்டு

| | | | | |
|---|---|---|---|---|
| வழக்கு எண் | OS | 179 | of | 2019 |

2026-ம் ஆண்டு ஜூலை திங்கள் 8-ம் நாளான இன்று

| | |
|---|---|
| வாதி/பிரதிவாதி<br>மனுதாரர்/எதிர்மனுதாரர் | தரப்பில் பி.வா.சா.1-வது சாட்சியின் வாக்குமூலமானது 1973 ம் ஆண்டின் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு திரு.நாகராஜன், Bench Clerk Grade-I என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சந்திரசேகர் | தந்தை பெயர் | |
| கிராமம் | | கணவர் பெயர் | |
| ஜாதி | | தாலுக்கா | |
| | | சமயம் | |
| தொழில் | | வயது | |

நாள்-08.07.2026

பி.வா.சா.-1

வாதி தரப்பு குறுக்கு விசாரணை-

நான் SSLC படித்திருக்கிறேன். எனக்கு தமிழ் நன்றாக எழுதப் படிக்க தெரியும். நானும் 2ம் வாதியும் 8 ஆண்டுகளாக கல்பாக்கம் அரசு போக்குவரத்து கழக பணிமனையில் வேலை பார்த்தோம். எனவே 8 ஆண்டுகளாக அவரை தெரியும். என்னுடைய மகன் திருமணத்திற்கு அவசரமாக பணம் தேவைப்பட்டதால் 2ம் வாதியிடம் கடன் கேட்டேன். 2ம் வாதி 10 சதவீதம் ஆண்டு வட்டி என்று சொன்னபோதிலும் அவசியம் காரணமாக அவரிடம் பணம் கடன் பெற்றேன். நான் ரூ.2 லட்சம் கடன் கேட்டேன். 2ம் வாதி ஒரு லட்சம் மட்டும் கடன் கொடுத்தார்.

அப்போதே 10 சதவீதம் மாத வட்டி ரூ.10 ஆயிரம் பிடித்தம் செய்து கொண்டு ரூ.90 ஆயிரம் என்னிடம் கொடுத்தார். வா.சா.ஆ.1 ல் உள்ள 2 வது சாட்சி கையெழுத்து 2 ம் வாதி சங்கர் கையெழுத்து ஆகும். வா.சா.ஆ.1 ல் உள்ள 1 வது சாட்சி கையெழுத்து யாருடையது என்று தெரியாது. வா.சா-ஆ 2 காசோலைகள் (3 எண்ணிக்கை) நான் கொடுத்தவைதான். வா.சா.ஆ.4 வழக்கறிஞர் அறிவிப்பு வாதிகள் எனக்கு அனுப்பியதாகும். அந்த அறிவிப்பில் இருந்த விவரங்களை படித்து தெரிந்து கொண்டேன். அந்த அறிவிப்பில் நான் ரூபாய் ஏழரை லட்சம் கடன் வாங்கியதாகவும், அதில் பகுதி discharge செய்யும் விதமாக ரூ.6 லட்சத்திற்கு தலா ரூ.2 லட்சம் வீதம் 3 காசோலைகள் வழங்கினேன் என்றால் நான் 2 ம் வாதியிடம் பணம் வாங்கும் போதே நிரப்பப்படாத 3 காசோலைகளை கொடுத்தேன். அந்தஅறிவிப்பிற்கு சுமார் 2 மாதங்கள் கழித்து வா.சாஆ.6 பதில் அறிவிப்பு கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த பதில் அறிவிப்பில் உள்ள விவரங்கள் நான் சொல்லி எழுதப்பட்டவைதான். அறிவிப்பு மற்றும் பதில் அறிவிப்பு காலக்கட்டததில் எனக்கு ஒரு சாலை விபத்து நேர்ந்தது என்றால் சரிதான். நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது 2 ம் வாதி மருத்துவமனைக்கு வந்து என்னை பார்த்தார் என்றால் சரியல்ல. 2 ம் வாதி மருத்துவமனைக்கு வந்தார் என்றும், நான் அவரிடம் காசோலையை வங்கியில் போட வேண்டாம் என்று சொல்லி தொகையை ரொக்கமாக கொடுத்துவிடுவதாக சொன்னேன் என்றால் சரியல்ல. அதனால்தான் வாதி என் மீது காசோலை வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல்

செய்துள்ள எதிர்வழக்குரையில் 1லட்சம் மட்டும் கடன் கேட்டதாக சொல்லியிருக்கிறேன் என்றால் அதுபற்றி தெரியவில்லை. ஆங்கிலத்தில் உள்ளதால் அதுபற்றி என் வழக்கறிஞருக்குதான் தெரியும். மேலும் வாதி இன்னொரு நபரிடம் பணம் ஏற்பாடு செய்து தருவதாகவும், அந்த நபர் 10 சதவீதம் மாத வட்டி கோருகிறார் என்று எதிர் வழக்குரையில் சொல்லப்படவில்லை என்றால் ஆங்கிலம் எனக்கு எழுதப்படிக்க தெரியாது. வா.சா.ஆ 1ல் உள்ள விலாசம் என்னுடையதுதான். என் பிரமாண வாக்குமூலத்திலும் அதே விலசாம்தான் சொல்லப்பட்டுள்ளது. வாதிகள் இந்த வழக்கில் மனுதாக்கல் செய்து அதில் என்னுடைய மாத சம்பளத்தை பற்றுகை செய்ய உத்தரவானது என்றால் நான் போக்குவரத்து கழக உயர் அதிகாரியிடம் வாதிகளுக்கு செலுத்த வேண்டிய தொகையை கொடுத்துவிட்டேன் என்று சொன்னேன். எனவே என்னுடைய மாத சம்பளத்தில் பிடித்தம் எதுவும் செய்யப்படவில்லை. என் உயர் அதிகாரி என் சம்பளத்தில் பிடித்தம் செய்யாததால் அவர் மீது contempt நடவடிக்கை எடுக்க வாதிகள் மனு தாக்கல் செய்தார்கள் என்றால் அதுபற்றி தெரியாது. contempt மனுவில் என் உயர் அதிகாரிகளுக்கு நோட்டீஸ் சென்ற பிறகு நான் உடனடியாக பணி ஓய்வு பெற்றேன் என்றால் வயது மூப்பு காரணமாக 58 வயதில் பணி ஓய்வு பெற்றேன். நான் போக்குவரத்து கழகத்தில் பணியில் இருந்த போது chit நடத்தினேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ-6 பதில் அறிவிப்பில் பத்தி 6 ல் chit business மற்றும் எனக்கும் 2ம் வாதிக்கும் இடையே ஒரே இடத்தில் பணி புரிபவர்கள் என்ற நிலையில் அறிமுகம்

என்பது சொல்லப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி என் வழக்கறிஞருக்குதான் தெரியும்.ஆங்கிலம் எனக்கு தெரியாது. chit fund loss மற்றும் திருமண செலவுகளுக்காக நான் வாதிகளிடம் ரூ. 7 லட்சத்து 50 ஆயிரம் கடன் பெற்றேன் என்றால் சரியல்ல. வாதிகள் அவர்களுடைய சேமிப்பு, நண்பர்களிடம் இருந்து கை கடன், 1ம் வாதியின் நகைகளை அடமானம் வைத்து ரூ.7 லட்சத்தி 50 ஆயிரம் ரொக்கமாக கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. நான் வாதிகளிடம் பெற்ற கடனை திருப்பி செலுத்திவிட்டேன் என்பதற்கு ஆதாரம் உள்ளதா என்றால், 2ம் வாதி வங்கி கணக்கிற்கு ரூ.97 ஆயிரம் 03.06.2017 அன்று அனுப்பினேன். அன்றைய தினமே ரொக்கமாக ரூ.3 ஆயிரம் 2ம் வாதியிடம் கொடுத்துவிட்டேன். ரூ.97 ஆயிரம் கொடுத்தற்கு வங்கி கணக்கு உள்ளது. ரூ.3 ஆயிரம் கொடுத்தற்கு ரசீது பெறவில்லை. நான் மேற்படி தொகையை செலுத்திய பிறகு நான் கொடுத்த பூர்த்தி செய்யப்படாத கடனுறுதி சீட்டு மற்றும் காசோலைகளை திருப்பி தருமாறு வாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பவில்லை. வாய் மொழியாக கேட்டேன். அதனால்தான் பிரச்சனை ஏற்பட்டது. நனான் மாதம் தோறும்வட்டி தொகை ரூ.10 ஆயிரம் 2ம் வாதியிடம் கொடுத்து வந்தேன். சம்பளம் வாங்கிய உடன் அதில் இருந்து வட்டி தொகையை தவறாமல் செலுத்தி வந்தேன். ஆனால் அதற்கான அத்தாட்சி எழுதி வாங்கவில்லை. என்னுடைய மாத சம்பளம் என் வங்கி கணக்கிற்கு வந்துவிடும். என் வங்கி கணக்கில் இருந்து தொகையை எடுத்துதான் 2ம் வாதியிடம் வட்டி தொகை

செலுத்தி வந்தேன். நான் 4 வருடங்களாக வட்டி தொகை எதுவும் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. 2ம் வாதியிடம் ரூ1லட்சம் கடனை அடைக்க ஸ்ரீராம் சிட் fund ல் ரூ1லட்சம் கடன் வாங்கியதாக என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியிருக்கிறேன். அதற்கான ஆதாரம் தாக்கல் செய்யவில்லை. ஆனால் என் வங்கி கணக்கு பட்டியலில் அது இடம் பெற்றுள்ளது.

T CHANDRASEKARAN

Digitally signed by T CHANDRASEKARAN
Location: Principal District Judge, Chengalpattu